**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்-I,**

**கொடைக்கானல்.**

**STC.No. 54/2025**

**வழக்கு சாட்சி DW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **கிருஷ்ணமூர்த்தி** | தொழில் | : தோட்ட வேலை |
| தகப்பனார் பெயர் | : ராமசாமி | கணவர் பெயர் | : ------ |
| கிராமம் | : போடிநாயக்கனூர் | இனம் | : ஆண் |
| தாலுகா | : போடிநாயக்கனூர் | வயது | : 38/2026 |
| மாவட்டம் | : தேனி | நாள் | : 13.07.2026 |

**முதல் விசாரணை :**

நான் போடிநாயக்கனூரில் வசித்துவருகிறேன் . முதலில் நான் செல்போன் கடை வைத்து நடத்தி வந்தேன் . தற்போது தோட்ட வேலை செய்து வருகிறேன் . எனக்கு இந்த வழக்கின் புகார்தாரர் யார் என்று நேரடியாகத் தெரியாது. இந்த வழக்கு போட்ட பிறகுதான் அங்காள ஈஸ்வரி என்ற புகார்தாரரின் பெயர் எனக்கு தெரியவந்தது. என் மனைவி வனராணி, அவர் தையல் வேலை செய்து வருகிறார் . என் மனைவி வனராணி பி.சி.பட்டியைச் சேர்ந்த அங்கண்வாடி பணியாளர் மகேஷ்வரி என்பவருடன் தான் வரவு, செலவு, மாதச் சீட்டுகள் கட்டி வந்தார். மகேஷ்வரியிடம் எனது அவசர தேவைக்காக கொரோனா காலகட்டம் 2020ல் நான் மகேஷ்வரியிடம் ரூ .1,00,000/- கடன் பெற்றேன் . அதற்கு அத்தாட்சி ஏதேனும் வேண்டும் என்றுச்சொன்ன காரணத்தால் எனது வங்கி கணக்குகளான சிட்டி யூனியன் மற்றும் IDBI போடி வங்கிகளில் சேமிப்பு கணக்கு தொடர்புடைய இரண்டு நிரப்பப்படாத மற்றும் கையொப்பம் இடாத காசோலைகளை மகேஷ்வரியிடம் போடியில் வைத்து கொரோனா காலகட்டத்தில் கொடுத்தேன். பிறகு நான் வாங்கிய ரூ.1,00,000/- கடனை திரும்பி செலுத்திவிட்டேன். நான் வட்டி மட்டும் பாக்கியாக ரூ .17,000 /- நிலுவைத் தொகை வைத்திருந்தேன் . நான் கடனை கட்டியதன் காரணமாக எனது காசோலைகளை திரும்ப கேட்டபோது எனது சீட்டுப்பணம் 7 மாதங்கள் பாக்கியை கட்டி முடித்த பிறகு காசோலையை வாங்கிக்கொள் என்று தெரிவித்தார். நான் மகேஷ்வரியிடம் கட்டவேண்டிய பாக்கி வட்டி தொகையை சீட்டுத்தொகையில் இருந்து கழித்துக்கொண்டு , மீத பணத்தையும் காசோலையும் திரும்பக் கேட்டேன் . அதற்கு மகேஷ்வரி

சீட்டு முடிய காலம் உள்ளது, பிறகு தருகிறேன் என்று சொல்லிவிட்டார். நான் பலமுறை சீட்டுத்தொகையை திரும்ப கேட்டும் , மகேஷ்வரி மீத சீட்டுத்தொகையை தர மறுத்து ரூ.17,000 /- வட்டியைச் செலுத்தினால் தான் பணம் தருவேன் என்று தெரிவித்தார் . மேற்சொன்ன சம்பவம் தொடர்பாக போடி டவுன் காவல்நிலையத்தில் 2 வருடங்களுக்கு முன்பு புகார் கொடுத்தேன். பிறகு அங்கு காவல்நிலையத்தில் விசாரணைக்கு தோன்றிய மகேஷ்வரி பணத்தை திரும்ப தந்துவிடுவதாகச் சொல்லிவிட்டு சென்றார். நான் போடி காவல்நிலையத்தில் மகேஷ்வரி மற்றும் அவரது இரண்டாவது கணவர் அழகர் சாமி என்பவர் மீது புகார் கொடுத்திருந்தேன். அழகர் சாமி கடற்படை பணி புரிந்து தற்போது போடி கிளை SBI வங்கி காசாளராக உள்ளார். அதன் காரணமாக மகேஷ்வரி யார் என்று தெரியாத அங்காள ஈஸ்வரி என்பவரைக் கொண்டு இந்த காசோலை வழக்கை என் மீது தொடுத்துள்ளார். இந்த வழக்கிற்கு பிறகுதான் பண்ணைக்காடு எங்கு உள்ளது என்று எனக்குத் தெரியும் . நான் கொடுத்துவைத்திருந்த IDBI வங்கி காசோலையைக் கொண்டு அழகர் சாமி என் மீது தேனி விரைவு நீதிமன்றத்தில் ரூ.5,00,000 /- தர வேண்டும் என்று காசோலை வழக்கு தொடுத்துள்ளார். இந்த புகார்தாரர் குறித்து நான் விசாரித்த போது புகார்தாரர் அங்காளஈஸ்வரி மகேஷ்வரியின் உறவு முறையில் அக்கா, தங்கை என்று தெரிந்து கொண்டேன். நான் மகேஷ்வரி, அழகர்சாமி ஆகியோரிடம் பணம் வாங்கியது, திரும்பியது தொடர்பாக என் வசம் ஆவணங்கள் உள்ளது. .

**(ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.07.13 16:15:27 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.